بسم الله الرحمن الرحيم

# இஸ்லாமிய பாடத்திட்டம்

## திருக்குர்ஆன் விளக்கவுரை


வெளியீடு

**இஸ்லாமிய அழைப்பு மையம்**

**ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ்**
நாகர்கோவில்
குமரி மாவட்டம்

بسم الله الرحمن الرحيم

# திருக்குர்ஆன் விளக்கவுரை

## குர்ஆன் ஓர் எளிய அறிமுகம்

''குர்ஆன்'' என்ற அரபிச் சொல்லுக்கு ''ஓதப்பட்டது'', ''ஓதக்கூடியது'', ஓதவேண்டியது என்று பொருள்படும். அண்ணல்நபி அவர்களுக்கு ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாக ''ஓதப்பட்ட'' இவ்வேதம், மனித சமுதாயம் தன் மேன்மையைக் கருதி ''ஓதவேண்டியது'' என்ற பொருளையே தன் பெயராகக் கொண்டிருப்பதும், இவ்வேதமே இவ்வுலகில் அதிகமான மக்களால் ''ஓதப்படுவதும்'' சிந்தித்து நயக்கத்தக்கதாக இருக்கிறது.

## அருளப்பெற்றகாலம்

நபிகள் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களுடைய நாற்பதாவது வயதிலே,(கீபி. 610.ஆகஸ்டு 10) ரமளான் மாதத்தின் பிந்திய இரவுகளில் ஓர் இரவன்று, மக்கமா நகருக்கு அருகிலுள்ள ''ஹிரா'' குகையிலே தனித்திருந்து, இறைவனைச் சிந்தித்திருந்த நேரத்தில் தான் வானவர் ஜிப்ரில் மூலம் இறைவனால் திருக் குர்ஆன் முதன் முதலாக நபியவர்களுக்கு அருளப் பெற்றது. அந்த இரவு தான் ''லைலத்துல் கத்ர்'' (கண்ணியமிக்க இரவு) என்று அறியப்படுகிறது.

மாண்புமிக்க அந்த இரவிலே முதன் முதலாக அருளப் பெறத்துவங்கிய இந்த வான்மறை, அந்தந்தக் காலத்தின் நிலைமைக்கும் அவசியத்திற்கும் தக்கவாறு, -பெருமானார் வாழ்ந்த பிந்திய 23-வருடங்களில்- கொஞ்சங் கொஞ்சமாக அருளப்பெற்று பூர்த்தி பெற்றது.

இவ்வாறு அந்த 23-ஆண்டுகளில் இறைவனால் அறிவிக்கப்பட்ட 6200க்கும் அதிகமான வசனங்கள் கொண்டதே, அன்று பெற்று பின்பற்றியொழுகும் திருக் குர்ஆன்.

## குர்ஆனின் அமைப்பு

இந்த 6200க்கும் அதிகமான வசனங்கள் 3 வசனங்கள் முதல் 286 வசனங்கள் வரையிலுமுள்ள, சிறிய, பெறிய 114 அத்தியாயங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

திருக் குர்ஆனில் உள்ள வசனங்களும், அத்தியாயங்களும் இப்பொழுதுள்ள வரிசைக்கிரமப்படி அருளப் பெறவில்லை.

கால நிலைமைக்கும், மக்களின் தேவைக்கும் அவசியமான அளவு சிறிது, சிறிதாக அத்தியாயங்களாகவும், வசனங்களாகவும், அருளப் பெற்று வந்தன. இவ்வாறு அருளப் பெற்று வரும் காலத்தில், நபி பெருமானாவர்களுக்கு, இறைவன் கற்ப்பித்ததற்கிணங்க, இன்னின்ன வசனங்கள், இன்னின்ன அத்தியாயங்களை சேர்ந்தவையெனவும், அதிலும் குறிப்பிட்ட வசனம், குறிப்பிட்ட அத்தியாயத்தில் எத்தனையாவது வசனம் எனவும் அறிவித்து வந்தார்கள். அந்த ஒழுங்கு முறைப்படி அமைக்கப் பெற்றது தான், இக்காலத்தில் நமமிடத்தில் இருக்கும் திருக் குர்ஆன்.

ஒவ்வொருவரும் திருக் குர்ஆனைக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையேனும் ஓதி முடிப்பதற்கேற்றவாறு, திருக் குர்ஆனிலுள்ள வசனங்கள்யாவையும் ஏறத்தாழ சமமான முப்பது ''ஜுஸ்வு'' (பாகங்)களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது.

## மக்கீ, மதனீ

திருக் குர்ஆன் அருளப் பெற்ற 23 ஆண்டுகளில், பெருமானார் அவர்கள், முதல்பத்தாண்டுகளில் மக்காவிலும், பிந்திய பதிமூன்று ஆண்டுகள் மதீனாவிலும் வாழ்ந்திருந்தார்கள்.

அவர்கள் மக்காவில் வாழ்ந்திருந்த 10 ஆண்டு காலத்தில் மக்காவிலும், அதையடுத்து அவர்கள் சென்றிருந்த மற்றைய இடங்களிலும் அருளப் பெற்ற அத்தியாயங்களுக்கு ''மக்கீ'' (மக்காவில் அருளப் பெற்றவை) என்றும், அவர்கள் மதீனாவில் வாழ்ந்த 13- ஆண்டு காலத்தில் மதீனாவிலும், அதையடுத்து அவர்கள் சென்ற மற்ற இடங்களிலும் அருளப் பெற்ற அத்தியாயங்களுக்கு ''மதனீ'' (மதீனாவில் அருளப் பெற்றவை) என்றும் கூறப்பெறும்.

திருக் குர்ஆனில் உள்ள மொத்த அத்தியாயங்களில் 86 ''மக்கீ'' அத்தியாயங்களும், 28 ''மதனீ'' அத்தியாயங்களும் இருக்கின்றன.

## குர்ஆன் ஓதுவதின் சிறப்புகள்

உலகில் பல சமூகங்களுக்கும் வேதங்கள் அருளப்பட்டன. ஆனால் அச்சமூகங்கள் தமது வேதங்களைத் தொலைத்து விட்டன. ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருமறை அல்-குர்ஆன் இன்று வரை எதுவித மாற்றத்துக்கும் உட்படாது முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதனை அழிக்கவோ, மாற்றவோ எவராலும் முடியாது. ஏனெனில் அது இன்று வரை பல்லாயிரக்கணக்கான மனித மனங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது அல்-குர்ஆனுக்கேயுரிய சிறப்பம்சமாகும். மேலும் அல்லாஹ் தானே அதனைப் பாதுகாப்பதாகவும் வாக்கருளியுள்ளான். அல்-குர்ஆனை அகிலத்தார்க்கு ஒரு அருட்கொடையாய், வழிபாடு செய்வோர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாய் அல்லாஹ் இறக்கியருளியுள்ளான்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமறையை ஓதுவதின் சிறப்பு குறித்து திருமறையும், நபியவர்களின் பொன் மொழிகளும் அதிகமதிகம் வலியுறுத்திக் கூறுகின்றன. அல்லாஹ் திருமறையில் குறிப்பிடுகின்றான்: எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகின்றார்களோ, மேலும் தொழுகையை நிலைநாட்டுகின்றார்களோ, நாம் வழங்கியவற்றிலிருந்து மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் கொடுக்கின்றார்களோ அவர்கள் திண்ணமாக என்றைக்கும் அழியாத ஒரு வியாபாரத்தையே ஆதரவு வைக்கிறார்கள். அவர்களுக்குரிய நற்கூலியை அவன் முழுமையாகக் கொடுப்பான். இன்னும் தன் அருளிலிருந்தும் அவர்களுக்கு மிகுதப் படுத்துவான். நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவனும் நன்றியை ஏற்றுக் கொள்ளுபவனுமாவான். (35 : 29-30)

உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தாமும் குர்ஆனைக் கற்று, பிறருக்கும் அதனைக் கற்றுக் கொடுப்பவர்தாம் உங்களில் சிறந்தவராவார்'என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருவருக்கு அல்லாஹ் திருக்குர்ஆனைக் (கற்றுக்) கொடுத் தான். அதன் மூலம் அவர் இரவு-பகலில் நின்று வணங்கினார். இன்னொருவருக்கு அல்லாஹ் பொருளாதாரத்தை வழங்கினான். அதன் மூலம் அவர் இரவு-பகலில் நல்ல வழியில் செலவு செய்கிறார். இந்த இருவர் விஷயத்திலன்றி பொறாமை கொள்ளுதல் என்பது இல்லை' (புகாரி, முஸ்லிம்). மேலும் அபூ உமாமா (ரலி) வர்கள் அறிவிக்கின்றார்கள்: குர்ஆனை ஓதுங்கள். திண்ணமாக தன்னை ஓதக் கூடியவர்களுக்கு மறுமை நாளில் அது பரிந்துரை செய்யக் கூடியதாக வரும். (முஸ்லீம்)

நபியவர்கள் கூறினார்கள்: குர்ஆனை திறமையாகக் கற்றுத்தேர்ந்தவர், நல்ல கண்ணியமிக்க எழுத்தர் (மலக்கு) களுடன் இருப்பார். எவர் குர்ஆனை திக்கித் திக்கி ஓதுகின்றாரோ, மேலும் அவருக்கு அது கடினமாகவும் இருக்கின்றதோ அவருக்கு இரட்டைக் கூலி உண்டு' (புகாரி, முஸ்லிம்). ஒரு கூலி ஓதியதற்காக. மற்றொன்று சிரமத்துடன் அதை ஓதியதற்காக. அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எவர் குர்ஆனிலிருந்து ஒரே ஒரு எழுத்தை ஓதுகின்றாரோ அதற்காக அவருக்கு ஒரு நன்மை கிடைக்கின்றது. அந்த ஒரு நன்மை அதைப் போன்று பத்து நன்மைகளாக அதிகரிக்கப்படுகின்றது. அலிஃப்-லாம்-மீம் என்பதை நான் ஒரு எழுத்து என்று சொல்ல மாட்டேன். ஆனால் அலிஃப் ஒரு எழுத்து. லாம் ஒரு எழுத்து. மீம் ஒரு எழுத்து'. (திர்மிதி)

1- நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு சிபாரிசு செய்யும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

2- குர்ஆனையும் அதைக்கொண்டு உலகத்தில் அமல் செய்தவர்களையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும். சூரத்துல் பகராவும் சூரத்துல் ஆல இம்ரானும் முன்வந்து குர்ஆனை ஓதியவருக்கு(சுவர்க்கத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக) வாதாடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

3- குர்ஆனை ஓதியவருக்காக (நாளை மறுமையில்) சொல்லப்படும். ''நீர் குர்ஆனை ஓதிக்கொண்டு சுவர்க்கத்தின் (படித்தரத்தில்) ஏறிக்கொண்டு செல்வீராக. உலகத்தில் நிறுத்தி நறுத்தி ஓதியது போன்று (இங்கேயும்) நிறுத்தி நிறுத்தி ஓதுவீராக. நீர் ஒதி முடிக்கும் கடைசி ஆயத்தே சுவர்க்கத்தின் உமது அந்தஸ்தாகும்'' என அவருக்குக் கூறப்படும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத் , திர்மிதி)

""'குர்ஆனை ஓதுவதினால் எந்த அளவக்கு நன்மைகள் குவிகின்றன"" என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்களும் இந்தக் குர்ஆனை ஒவ்வொரு நாளும் உரிய முறையில் ஓதப்பழகிக் கொள்ளுங்கள். அதன் மொழியாக்கத்தையும் படிப்பினை பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு நிதானமாகப்படியுங்கள். அதன் ஏவல் விலக்கல்களை எடுத்தும் தவிர்த்தும் நடவுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நமது ஈருலக வாழ்க்கையையும் வெற்றி உள்ள வாழ்க்கையாக ஆக்கப் போதுமானவன். யா அல்லாஹ்! ""'இந்தக் குர்ஆனை நாளை மறுமையில் எங்களுக்கு சிபாரிசு செய்யக்கூடிய குர்ஆனாக"" ஆக்கி வைப்பாயாக.

## திருக் குர்ஆன் ஓதுவதின் ஒழுங்கு முறைகள்

அல்லாஹ்வுக்காக ஓதுகிறோம் என்ற தூய எண்ணத்துடன் ஓத வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: உங்களது கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கிய வண்ணம் அவனை அழையுங்கள். (40 : 14)

கவனத்துடனும் மனஓர்மையுடனும் ஓத வேண்டும். ஏனெனில் குர்ஆன் அல்லாஹ்வின் வாக்காகும். சுத்தமான நிலையில் அதனை ஓத வேண்டும். இது அல்லாஹ்வின் வேதத்திற்கு நாம் அளிக்கும் கண்ணியமாகும். எனவே பெருந்துடக்கு போன்றவற்றிலிருந்து சுத்தமான நிலையில்தான் அதனை ஓதவேண்டும். அருவருப்பான இடங்களில் குர்ஆனை ஓதலாகாது. ஏனெனில் இது போன்ற இடங்களில் திருமறையை ஓதுவது கண்ணியக் குறைவானதாகும். மேலும் மல-ஜலம் கழிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலும் குர்ஆனை ஓதுதல் கூடாது. கண்ணியமிக்க குர்ஆனுக்கு இத்தகைய இடங்கள் ஒருபோதும் உகந்தவையல்ல.

திருக்குர்ஆனை ஓதுவதற்கு முன்பாக சபிக்கப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறியுள்ளான்: நீர் குர்ஆனை ஓதத் தொடங்குவீராயின் சபிக்கப்பட்ட ஷ‘த்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருவீராக!. (16 : 98)

குர்ஆனை அழகான முறையில் ராகமிட்டு ஓத வேண்டும். ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள் அறிவிக்கி றார்கள்: நபியவர்கள் மஃரிப் தொழுகையில் அத்தூர் அத்தியாயத்தை ஓதிடக் கேட்டேன். நபியவர்களை விட அழகிய குரலுடைய ஒருவரை அல்லது அழகாக ஓதுபவரை நான் கேட்டதில்லை’. (புகாரி, முஸ்லிம்)

தொழுபவர், தூங்குபவர் போன்றோருக்குத் தொல்லை தரும் வண்ணம் குரலுயர்த்தி ஓதலாகாது. ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். அங்கே மக்கள் குர்ஆனை சப்தமிட்டு ஓதிக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுபவர் தன் இறைவனுடன் மெதுவாக உரையாடுகிறார். எனவே எதைக்கொண்டு அவனுடன் உரையாடுகிறார் என்பதைக் கவனித்துக் கொள்ளட்டும். மேலும் உங்களில் ஒருவர் மற்றவருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் முறையில் குர்ஆனை சப்தமிட்டு ஓத வேண்டாம்’ (முஅத்தா). குர்ஆனை ஓதும்போது நிறுத்தி, நிதானமாக ஓத வேண்டும். அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: மேலும் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக! (73 : 3). அத்தோடு திருக்குர்ஆனை ஓதுபவர் ஸஜ்தா வசனத்தைக் கடந்து சென்றால் ஸுஜூது செய்தல் வேண்டும்.

யா அல்லாஹ்! உனது வேதத்தை உனக்கு திருப்தியளிக்கின்ற வகையில் ஓதுகின்ற பாக்கியத்தைத் தந்தருள்வாயாக! மேலும் குர்ஆனை எங்களுக்குப் பாதகமாக அன்றி சாதகமாக ஆக்கி குர்ஆனை ஓதுவதன் மூலம் எங்களின் நன்மைகளை அதிகரித்து அந்தஸ்தை உயர்த்துவாயாக!

# குர்ஆன் தொகுக்கப்படுதல்

நபி(ஸல்) அவர்கள் தனக்கு அருளப்பட்ட குர்ஆனை முழுமையாக மனதில் சுமந்தவர்களாக இருந்தார்கள்.

...ரமலான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் ஜிப்ரீல்(அலை) நபியவர்களை சந்திப்பார்கள். அவரிடம் நபி(ஸல்) அவர்கள் குர்ஆனை எடுத்தோதிக் காட்டுவார்கள். (புகாரி 4997)

சஹாபாக்களில் பலரும் குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தார்கள். அவர்களில் பிரபலமான ஏழு பேரின் பெயர்கள் கீழ் வரும் மூன்று ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது.

1) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், ஸாலிம், முஆத், உபய் பின் க.ஃப் ஆகிய நால்வரிடமிருந்து குர்ஆனை எடுத்துக் கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி 4999)

2) நபி(ஸல்) அவர்களின் காலத்தில் குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தவர்கள் யார்? என்று அனஸ்(ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள், உபய் பின் க.ஃப், முஆத் பின் ஜபல், ஜைத் பின் ஸாபித், அபூ ஜைத் ஆகிய நால்வர் என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பவர்: கத்தாதா(ரஹ்) புகாரி 5003)

3) அபூதர்தா, முஆத் பின் ஜபல், ஜைத் பின் ஸாபித், அபூ ஜைத் ஆகிய நால்வரைத் தவிர வேறு யாரும் நபியவர்கள் மரணிக்கும் போது குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருக்கவில்லை என அனஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஸாபித். புகாரி 5004)

மேற்குறிப்பிட்ட மூன்றாவது ஹதீஸ் நான்கு சஹாபாக்கள் மட்டுமே குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்ததாக கூறுகிறது - இதற்கு அறிஞர்கள், விளக்கம் கூறும்போது, அனஸ்(ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது இந்த நால்வர் மட்டும் தான் அல்லது தாங்கள் முழுமையாக மனனம் செய்ததை நபியிடம் முழுமையாக ஓதிக்காண்பித்தவர்கள் இந்நால்வர் மட்டுமாக இருக்கக்கூடும் என்று கூறுகின்றனர்.

ஏனெனில் குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்த சஹாபாக்களின் எண்ணிக்கை அதிகமாகும். அவர்களின் பெயர்கள்:

நான்கு கலீ.ஃபாக்கள், தல்ஹா, ஸ.ஃத், இப்னு மஸ்ஊத், ஹீதை.ஃபா, ஸாலிம், அபூ"ஹுரைரா, அப்துல்லாஹ் பின் அஸ்ஸாஇப், அப்துல்லாஹ் பின் அப்பாஸ், அப்துல்லாஹ் பின் அம்ர், அப்துல்லாஹ் பின் உமர், அப்துல்லாஹ் பின் அஸ்ஸு"பைர், ஆயிஷா, ஹ.ஃப்ஸா, உம்மு ஸலமா, உபாதா பின் அஸ்ஸாமித், முஆத், முஜம்மி.ஃ பின் ஜாரியா, .ஃபுளாலா பின் உபைத், மஸ்லமா பின் முக்லித்.(ரலியல்லாஹு" அன்ஹு"ம்)

இவர்களில் சிலர் நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்கு பின்பே மனனம் செய்தலை நிறைவு செய்தார்கள். இந்த விபரங்கள், அபூ உபைத் அல் காஸிம் அவர்களின் "அல்-கிராஆத்" என்ற நூலை மேற்கோள்காட்டி, ஸு"யூத்தி அவர்களின் "அல்இத்கான்" பாகம் 1, பக்கம் 72ல் இடம் பெற்றுள்ளது.

## ஒரே ஏட்டில் எழுதப்படுதல்

நபி(ஸல்) அவர்கள் குர்ஆனை எழுதுவதற்கு அலி, முஆவியா, உபய் பின் க.ஃப், ஜைத் பின் ஸாபித் போன்ற சஹாபாக்களை நியமித்திருந்தார்கள். வஹி இறங்கியவுடன் எழுதுபவர்களை அழைத்து அதனை எழுதும் படி கட்டளையிடுவார்கள்.

அதே போல் சஹாபாக்களில் பலரும் தாங்கள் ஓதுவதற்காக தாங்களாக முன் வந்து குர்ஆனை எழுதிவைத்திருந்தார்கள்.

இப்படி குர்ஆன் முழுவதும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் ஒரே ஏட்டில் முழுமையாக எழுதப்படவில்லை. அதாவது சிலரிடம் சில சூராக்களும் வேறு சிலரிடம் வேறு சில சூராக்களும் என்கிற நிலையே இருந்தது. இவ்வாறு இருக்கும் நிலையிலேயே நபியவர்கள் மரணமடைந்தார்கள்.

நபியின் மரணத்திற்குப் பின்பு, அபூபக்ர்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஹிஜ்ரி பனிரெண்டாம் வருடம் நடைபெற்ற யமாமா யுத்தத்திற்கு பின்பு குர்ஆன் ஒரே ஏட்டில் எழுதப்பட்டது. அதுபற்றிய விபரம்:

ஜைத் பின் ஜாபித்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். யமாமா யுத்தத்திற்குப் பின்பு அபூபக்ர்(ரலி) என்னை கூப்பிட்டு ஆள் அனுப்பினார்கள். நான் அவர்களிடம் சென்ற போது அவர்களோடு உமர்(ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது அபூபக்ர்(ரலி) அவர்கள் கூறினார்கள். யமாமா யுத்தத்தில் குர்ஆனை மனனம் செய்த காரீகள் அதிகமாக கொல்லப்பட்டு விட்டனர். வேறு போர்களில் இன்னும் அதிக காரீகள் கொல்லப்படலாம் என்று நான் அஞ்சுகிறேன். அப்படி நடந்தால் குர்ஆனின் பல பகுதிகள் இல்லாமல் போய்விடும். ஆகவே குர்ஆன் முழுமையாக(ஒரே ஏட்டில்)ஒன்று திரட்டப்படுவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன் என உமர் என்னிடம் வந்து கூறினார். அதற்கு நான் உமரிடம், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நாம் எப்படிச் செய்வதென்றேன், அதற்கு உமர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது நல்ல செயல்தான் என்று கூறி என்னிடம் இது பற்றி திரும்பத்திரும்ப பேசியபின் அல்லாஹ் என் மனதில் அது பற்றிய தெளிவை ஏற்படுத்தினான். உமரின் கருத்தை நான் சரியென கருதுகிறேன். இவ்வாறு அபூபக்ர்(ரலி) அவர்களுக்கும் உமர்(ரலி) அவர்களுக்கும் நடந்த உரையாடலை ஸஜத்(ரலி) அவர்களிடம் அபூபக்ர்(ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஜைத்(ரலி) தொடர்ந்து கூறுகிறார்கள்: அபூபக்ர் தொடர்ந்து என்னைப்பார்த்து, நீங்கள் விவரமான இளைஞர் நபி(ஸல்) அவர்களுக்கு வஹியை எழுதுபவராக இருந்திருக்கிறீர்கள் உங்களை நாங்கள் சந்தேகிக்கவில்லை. குர்ஆனை பலரிடமிருந்து பெற்று ஒன்று சேருங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக மலைகளில் ஒரு மலையை நகர்த்தும் படி அவர்கள் என்னைப் பணித்திருந்தால்கூட அது குர்ஆனை ஒன்று சேர்க்கும் படி இட்ட கட்டளையை விட கனமானதாக இருந்திருக்காது. அப்போது நான் (அபூபக்ர், உமர் இருவரையும் நோக்கி) அல்லாஹ்வின் தூதர் செய்யாத ஒன்றை நீங்கள் இருவரும் எப்படிச் செய்யலாம்? என்றேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது நல்ல செயல்தான் என்று கூறி அபூபக்ர் என்னிடம் திரும்பத்திரும்ப பேசினார்கள்- அதனால் அபூபக்ர் உமர் ஆகியோரின் மனதில் எதுபற்றிய தெளிவை அல்லாஹ் ஏற்படுத்தினானோ அதுபற்றிய தெளிவை என் மனதிலும் ஏற்படுத்தினான்.

அதன் பின் குர்ஆனை பலரிடமிருந்து பெற்று மரப்பட்டைகளிலிருந்தும், கற்தகடுகளிலிருந்தும் மனிதர்களின் இதயங்களிலிருந்தும் ஒன்று சேர்த்தேன். சூரத்துத் தவ்பாவின் கடைசி இரண்டு வசனங்களை அபூ குஜைமா அல் அன்சாரியிடம் கிடைக்கப் பெற்றேன் மற்றவர்களிடம் கிடைக்கவில்லை, (ஒன்று சேர்க்கப்பட்ட) அந்த முழு குர்ஆன் அபூபக்ர் அவர்களிடம் அவர்கள் மரணிக்கும் வரையிலும் இருந்தது. பின்பு உமரிடமும் அதன்பின் அவர்களின் மகள் ஹ.்.ப்ஸாவிடமும் இருந்தது. (அறிவிப்பவர்: ஜைத் பின் ஸாபித்(ரலி) நூல்: புகாரி 4986)

குர்ஆனை ஒன்று திரட்டுவதில் ஜைத் பின் ஸாபித்(ரலி) அவர்கள் மிக கண்ணும் கருத்துமாக இருந்து நுட்பமான வழி முறையை கையாண்டிருக்கிறார்கள் என்பது மேற்கூறிய செய்திகளில் இருந்து தெரியவருகிறது. அதாவது மனப்பாடத்திலிருந்து மட்டும் அவர்கள் கேட்டு எழுதவில்லை. எல்லா வசனங்களையும் எழுத்து வடிவிலும் பெற்ற பின்பே எழுதியிருக்கிறார்கள். அதில் வெறும் இரண்டு வசனங்கள் மாத்திரம் பலரிடம் மனனத்தில் இருந்தாலும் கூட அபூ குஜைமா(ரலி) அவர்களிடம் மட்டுமே எழுத்து வடிவில் இருந்தது என்பதை குறிப்பிட்டுச் சொல்வதை கவனிக்கவும்.

## குர்ஆன் பிரதியெடுக்கப்படுதல்

இஸ்லாம் பல நாடுகளிலும் பரவியபோது குர்ஆனின் ஏழு ஹர்.ஃப் முறைப்படி (ஏழு வட்டார மொழிகளில்) ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு முறையில் குர்ஆனை மக்கள் படித்தார்கள். அதேபோல் குர்ஆனின் வார்த்தைகளை தங்கள் வட்டார மொழியின்படி படித்தனர். இதனால் வெவ்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் ஒரே இடத்தில் கூடினால் குர்ஆனை ஓதுவதில் வேறுபாட்டை கண்டனர். ஒவ்வொரு பகுதியினரும் தாங்கள் ஓதுவதே சரியான முறை என்றும் மற்றவர்களுடைய கிராஅத் தவறு என்றும் கூறினர். இதனால் பல இடங்களில் குர்ஆனை ஓதுவதில் சர்ச்சைகள் எழுந்தது. ஆகவே ஒரே வித கிராஅத்தில் முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றினைப்பது அவசியமானது. உஸ்மான்(ரலி) அவர்கள் தங்கள் ஆட்சி காலத்தில் அதனைச் செய்தார்கள். அதுபற்றியவிவரம்:

அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அர்மீனிய்யா மற்றும் அதர்பய்ஜான் போர் நாட்களில் ஷாம் வாசிகளுக்கும் இராக் வாசிகளுக்கும் குர்ஆனை ஓதுவதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைக் கண்டு கவலை கொண்ட ஹுதை.ஃபா பின் அல்யமான்(ரலி) அவர்கள் கலீ.ஃபா உஸ்மான்(ரலி) அவர்களிடம் வந்து, யூத கிருத்தவர்கள் கருத்து வேறுபாடு கொண்டது போல் இந்த உம்மத்தும் வேதத்தில் கருத்து வேறுபாடு கொள்வதற்கு முன் பிடித்து நிறுத்துங்கள் என்று கூறினார்கள். உடனே ஹ.ஃப்ஸா(ரலி) அவர்களிடமிருந்த மூல குர்ஆனைப் பெற்று, ஜைத் பின் ஸாபித், அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர், ஸஈத் பின் அல்ஆஸ், அப்துர்ரஹ்மான் பின் அல்ஹாரிஸ் ஆகிய நால்வர் குழுவிடம் அதனைப் பிரதி எடுக்கும் படி உஸ்மான்(ரலி) அவர்கள் பணித்தார்கள். அப்போது உஸ்மான்(ரலி) இந்நால்வரில் குறைஷிகளாகிய பிந்திய மூவரையும் பார்த்து. நீங்கள் குர்ஆனின் ஏதேனும் வார்த்தையை எந்த விதத்தில் எழுதுவது என்று(மதீனாவாசியாகிய) ஜைத் பின் ஸாபித்தோடு முரண்பட்டீர்களென்றால் அந்தவார்த்தையை குறைஷிகளின் பேச்சு வழக்குப்படியே எழுதுங்கள். ஏனெனில் குர்ஆன் குறைஷிகளின் பேச்சுவழக்கில் தான் இறங்கியது என்றார்கள்.

அதன் படி அவர்கள் நால்வரும் குர்ஆனை பல பிரதிகளாக எழுதி முடித்தபோது மூல குர்ஆனை ஹ.ஃப்ஸா(ரலி) அவர்களிடம் உஸ்மான்(ரலி) திருப்பிக் கொடுத்தார்கள். பிரதி எடுக்கப்பட்டதை எல்லாப்பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள். மேலும் அதற்கு முன்பிருந்த எல்லா குர்ஆன் பிரதிகளையும் எரித்துவிடும்படி கட்டளையிட்டார்கள். நூல்: புகாரி 4987

இந்தச் செய்தி மூலம், குர்ஆனை ஏழு ஹர்.ஃப் முறைப்படி ஓதுவது அனுமதியிருந்தாலும் அதனால் கருத்து வேறுபாடு ஏற்படுவதை தவிர்க்கவும், மேலும் அரபுமக்கள் ஒவ்வொரு பகுதியினரும் குர்ஆனின் வார்த்தைகளை தங்களின் பகுதி வழக்கப்படி ஓதும் நிலையை மாற்றவும் உஸ்மான்(ரலி) அவர்கள் ஏற்பாடு செய்ததை அறிகிறோம்.

அதாவது குர்ஆனை ஒரே முறையில் எல்லோரும் ஓதவேண்டும். பல பகுதிகளின் பேச்சு வழக்கம் (வட்டார) மாறு பட்டாலும் குர்ஆனின் வார்த்தைகள் மக்கா குறைஷிகளின் வழக்கப்படி மொழியப்படுதல் வேண்டும்.

உஸ்மான்(ரலி) அவர்களின் உத்தரவினால் எழுதப்பட்ட குர்ஆனின் பிரதிகளின் எண்ணிக்கை ஏழு என்றும் நான்கு என்றும் ஐந்து என்றும் மூன்று விதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

1) அபூ ஹாத்தம் அஸ்ஸஜிஸ்தானி(ரஹ்) அவர்கள் கூறினார்கள். எழுதப்பட்ட குர்ஆன் பிரதிகள் ஏழு. அவை மக்கா, ஷாம், யமன், பஹ்ரைன், பஸரா, கூ.ஃபா ஆகிய ஆறு பகுதிகளுக்கும் ஒவ்வொன்று அனுப்பப்பட்டு மதீனாவில் ஒன்று வைக்கப்பட்டது. (ஆதாரம்: இப்னு அபீதாவூத் அவர்களின் கிதாபுல் மஸாஹி.ஃப் என்ற நூல்).

2) பெரும்பான்மை உலமாக்கள், உஸ்மான்(ரலி) அவர்களால் பிரதியெடுக்கப்பட்ட குர்ஆன் பிரதிகளின் எண்ணிக்கை நான்கு என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள். கூ.ஃபா, பஸரா, ஷாம் ஆகியவற்றுக்கு ஒவ்வொன்று அனுப்பிவிட்டு, ஒன்றை தன்னிடம்

(மதீனாவில்) வைத்துக் கொண்டார்கள். (ஆதாரம்: அபூ அம்ர் அத்தானீ அவர்களின் அல் முக்னிஉ என்ற நூல்).

3) ஐந்து பிரதிகள் எடுக்கப்பட்டது என்ற கருத்தை இமாம் ஸுயூத்தி அவர்கள் தனது அல் இத்கான் என்ற நூலில் குறிப்பிடுகிறார்கள்.

## குர்ஆன் பற்றிய சில விவரங்கள்

குர்ஆனின் சூராக்கள் அவற்றின் அளவை கவனித்து நான்கு வகை:

1) (அத்திவால்) நீளமானவை: அவை ஏழு. 1)பகரா 2)ஆல இம்ரான் 3)அந்நிஸா 4)அல்மாயிதா 5)அல் அன்ஆம் 6)அல் அ.்.ரா.்.ப் 7)அல் அன்.்.பால், அத்தவ்பா (இரண்டும் இணைந்து)

2) (அல்மிஊன்) நூறுகள்: அவை நூறு வசனங்களை விட சற்று அதிக வசனங்களைக் கொண்ட சூராக்கள். அல்லது நூறு வசனங்களுக்கு சற்று குறைவான வசனங்களை கொண்டவை.

3) (அல் மஸானீ) மீண்டும் மீண்டும் ஓதப்படுபவை: (முதல் இரண்டு வகைகளை காட்டிலும் அதிகமாக திரும்பத்திரும்ப இவை ஓதப்படுவதால் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவை இரண்டாவது வகையை விட குறைந்த எண்ணிக்கையிலான வசனங்களை கொண்டவை.

4) (அல் மு.்.பஸ்ஸல்) பிரிக்கப்பட்டது: (இந்த வகை சூராக்கள் அதிகமான ""பிஸ்மில்லா(ஹ்)"க்களால் பிரிக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் பெற்றுள்ளன). இவ்வகை, மூன்று பிரிவுகளைக் கொண்டது.

ஒன்று, (திவாலுல் மு.்.பஸ்ஸல்) மு.்.பஸ்ஸலில் நீளமானவை - அவை சூரத்துல் ஹுஜ்ராத்திலிருந்து சூரத்துல் புரூஜ் வரையிலாகும்.

இரண்டு, (அவ்ஸாத்துல் மு.்.பஸ்ஸல்) மு.்.பஸ்ஸலில் நடுத்தரமானவை - இவை சூரத்துல் புரூஜ் முதல் சூரத்துல் ளுஹா வரையிலாகும்.

மூன்று, (கிஸாருல் மு.்.பஸ்ஸல்) மு.்.பஸ்ஸலில் சுருக்கமானவை - இவை சூரத்துல் ளுஹா முதல் குர்ஆனின் இறுதி (அந்நாஸ்) வரையிலாகும்.

குர்ஆனின் சூராக்கள்(அத்தியாயங்கள்)எண்ணிக்கை 114 (நூற்றி பதினான்கு).

குர்ஆனின் ஆயத்துக்கள் (வசனங்கள்) மொத்தம் சுமார் 6200 (ஆராயிரத்து இருநூறு) ஆகும். (இதை விட கூடுதல் எண்ணிக்கையும் கூறப்படுகிறது அதற்கான காரணம், சில நிறுத்தங்களை ஆயத்து முடிவதாக சிலர் கருதுவதால்)

குர்ஆனின் வார்த்தைகள் மொத்தம்: சுமார் 77439 ஆகும். (சிலர் 77437 என்றும் வேறுசிலர் 77277 என்றும் கூறுகின்றனர்).

குர்ஆனின் எழுத்துக்கள் மொத்தம்: 323015 ஆகும். (சிலர் 321000 என்றும் வேறுசிலர் 340740 என்றும் கூறுகின்றனர்).

கீழே தரப்பட்டுள்ள அல் குர்ஆனின் சிறு அத்தியாயங்களை பொருளுடன் விளங்கி மனனம் செய்யும் பயிற்சியை எடுக்க வேண்டும்.

## سورة: الفاتحة

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَـٰنِ ٱلرَّحِيمِ ﴿١﴾ ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَـٰلَمِينَ ﴿٢﴾ ٱلرَّحْمَـٰنِ ٱلرَّحِيمِ ﴿٣﴾
مَـٰلِكِ يَوْمِ ٱلدِّينِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ﴿٥﴾ ٱهْدِنَا ٱلصِّرَٰطَ
ٱلْمُسْتَقِيمَ ﴿٦﴾ صِرَٰطَ ٱلَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ ٱلْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا ٱلضَّآلِّينَ ﴿٧﴾

### சூரத்துல் பாத்திஹா (1), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப் பெயரால்!

1) எல்லாப் புகழும் அனைத்துலகையும் படைத்து பரிபாலிக்கக் கூடிய அல்லாஹ்வுக்கே!

2) அவன் மாபெரும் கருணையாளன். தனிப் பெரும் கிருபையாளன்.

3) கூலி கொடுக்கும் நாளின் அதிபதி.

4) உன்னையே நாங்கள் வணங்குகிறோம். மேலும் உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்.

5) எங்களை நீ நேரான வழியில் செலுத்துவாயாக!

6) (அது) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களின் வழி.

7) உனது கோபத்திற்கு ஆளாகாத மற்றும் நெறிகெட்டுப் போகாதவர்களின் வழி!

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) ஏகத்துவம்! அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும்.

2) எந்த உதவியும் அல்லாஹ்விடம் தான் கேட்க வேண்டும்.

## سورة: الضحى

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَـٰنِ ٱلرَّحِيمِ

وَٱلضُّحَىٰ ﴿١﴾ وَٱلَّيْلِ إِذَا سَجَىٰ ﴿٢﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلَىٰ ﴿٣﴾ وَلَلْـَٔاخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ
ٱلْأُولَىٰ ﴿٤﴾ وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضَىٰٓ ﴿٥﴾ أَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَـَٔاوَىٰ ﴿٦﴾ وَوَجَدَكَ

ضَآلًّا فَهَدَىٰ ۝٧ وَوَجَدَكَ عَآئِلًا فَأَغۡنَىٰ ۝٨ فَأَمَّا ٱلۡيَتِيمَ فَلَا تَقۡهَرۡ ۝٩ وَأَمَّا ٱلسَّآئِلَ
فَلَا تَنۡهَرۡ ۝١٠ وَأَمَّا بِنِعۡمَةِ رَبِّكَ فَحَدِّثۡ ۝١١

## சூரத்துள் ளுஹா (93), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப் பெயரால்!

(1) முற்பகலின் மீது சத்தியமாக!

(2) இரவின் மீதும் சத்தியமாக., அது அமைதியாக வந்தடையும்போது!

(3) (நபியே!) உம் இறைவன் உம்மை ஒருபோதும் கைவிடவில்லை! உம்மைக் கோபிக்கவும் இல்லை.

(4) மேலும் திண்ணமாக பிந்திய காலகட்டம் முந்திய காலகட்டத்தை விட உமக்குச் சிறந்தது.

(5) மேலும் விரைவில் உம் இறைவன், நீர் திருப்தி கொள்ளும் அளவு உமக்கு வழங்குவான்.

(6) அவன் உம்மை அநாதையாகக் காணவில்லையா? பிறகு புகலிடம் தந்தானல்லவா?

(7) மேலும் அவன் உம்மை வழியறியாதவராகக் கண்டான்., பிறகு நேர்வழி காண்பித்தான்.

(8) மேலும் அவன் உம்மை ஏழையாகக் கண்டான்., பிறகு செல்வந்தராய் ஆக்கினான்.

(9) ஆகவே நீர் அநாதைகளுடன் கடுமையாக நடந்து கொள்ளாதீர்.

(10) மேலும் யாசகம் கேட்பவரை விரட்டாதீர்.

(11) மேலும் உம் இறைவனின் அருட்கொடை பற்றி எடுத்துரைப்பீராக!

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள உன்னத அந்தஸ்தும் உயர் பதவியும்.

2) ஜிப்ரீலை சந்திப்பதிலும் அவரிடம் இருந்து குர்ஆன் வசனங் களைப் பெறுவதிலும் நபியவர்களுக்கு இருந்த அதிக ஆர்வம்.

3) அநாதைகள் மீது பரிவு காட்டுவதும் யாசகர்களிடம் மென்மை யாக நடந்துகொள்வதும் மிக்க மேலான பண்புகளாகும்.

4) அல்லாஹ்வை அதிகம் அதிகம் புகழ்வதும் அவனுடைய அருட் கொடைகளை எடுத்துரைப்பதுமே உண்மையான இறைநம்பிக்கையாளனின் குணமாகும்.

## سورة: الشرح

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

أَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ ﴿١﴾ وَوَضَعْنَا عَنكَ وِزْرَكَ ﴿٢﴾ ٱلَّذِىٓ أَنقَضَ ظَهْرَكَ ﴿٣﴾
وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ﴿٤﴾ فَإِنَّ مَعَ ٱلْعُسْرِ يُسْرًا ﴿٥﴾ إِنَّ مَعَ ٱلْعُسْرِ يُسْرًا ﴿٦﴾ فَإِذَا فَرَغْتَ
فَٱنصَبْ ﴿٧﴾ وَإِلَىٰ رَبِّكَ فَٱرْغَب ﴿٨﴾

### சூரத்துஷ் ஷரஹ் (94), மக்காவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) (நபியே) நாம் உமது இதயத்தை உமக்கு விரிவாக்கித் தரவில்லையா?

(2) மேலும் உமது பெரும் சுமையை உம்மை விட்டு நாம் இறக்கிவைத்தோம்.

(3) அது, உமது முதுகை முறித்துக் கொண்டிருந்தது.

(4) மேலும் உமக்காக உமது புகழை நாம் உயர்த்தினோம்.

(5) உண்மையில் சிரமத்துடன் இலகு உள்ளது.

(6) திண்ணமாக சிரமத்துடன் இலகு உள்ளது.

(7) நீர் ஓய்வாக இருக்கும்போது வணக்க வழிபாட்டில் முனைப்புடன் ஈடுபடுவீராக.

(8) மேலும் உமது இறைவன் பக்கமே ஆர்வம் கொள்வீராக!

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) அழைப்புப் பிரச்சாரப் பணியில் உளப்பூர்வமான ஈடுபாட்டையும் பிடிப்பையும் நபியவர்களுக்கு அல்லாஹ் கொடுத்தான். தூதுச் செய்தியை முழுமையாக மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதில் நபியவர்களுக்கு நல்லுதவி அளித்தான்.

2) நபி (ஸல்) அவர்களின் புகழை அல்லாஹ் உயர்த்தினான். அவர்களின் பெயரை இப்புவி எங்கும் பரவச் செய்தான். எல்லாக் காலமும் நிலைக்கச் செய்தான்.

3) இரட்சகனின் உவப்பை அடைய நாடி தொடர்ந்து வணக்க வழி பாட்டில் ஈடுபடுமாறு நபியவர்களுக்கு அல்லாஹ் அறிவுரை கூறுகிறான்.

**سورة: التين**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

وَٱلتِّينِ وَٱلزَّيْتُونِ ﴿١﴾ وَطُورِ سِينِينَ ﴿٢﴾ وَهَٰذَا ٱلْبَلَدِ ٱلْأَمِينِ ﴿٣﴾ لَقَدْ خَلَقْنَا
ٱلْإِنسَٰنَ فِىٓ أَحْسَنِ تَقْوِيمٍ ﴿٤﴾ ثُمَّ رَدَدْنَٰهُ أَسْفَلَ سَٰفِلِينَ ﴿٥﴾ إِلَّا ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَمِلُوا۟
ٱلصَّٰلِحَٰتِ فَلَهُمْ أَجْرٌ غَيْرُ مَمْنُونٍ ﴿٦﴾ فَمَا يُكَذِّبُكَ بَعْدُ بِٱلدِّينِ ﴿٧﴾ أَلَيْسَ ٱللَّهُ بِأَحْكَمِ
ٱلْحَٰكِمِينَ ﴿٨﴾

**சூரத்துத் தீன் (95), மக்காவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) அத்தி மீதும் ஒலிவம் மீதும் சத்தியமாக!

(2) சினாய் மலை மீதும் அமைதியான இந்த (மக்கா) நகர் மீதும் சத்தியமாக!

(3) திண்ணமாக நாம் மனிதனை மிகச் சிறந்த அமைப்பில் படைத்தோம்.

(4) பிறகு அவனைத் தாழ்ந்தவர்களிலே மிகவும் தாழ்ந்தவனாக ஆக்கினோம்.

(5) ஆனால் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்களைத் தவிர! அவர்களுக்கு முடிவில்லாத நற்கூலி உண்டு.

(6) எனவே (நபியே) இதன் பிறகும் நற்கூலி - தண்டனை (வழங்கப்படும் மறுமை நாள்) விஷயத்தில் உம்மை யாரால்தான் பொய்ப்படுத்த முடியும்?

(7) அல்லாஹ் ஆட்சியாளர்கள் அனைவரினும் மாபெரும் ஆட்சியாளன் அல்லவா?

## கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) அல்லாஹ், மூன்று சத்தியங்கள் செய்து மனிதனை மிக அழகிய வடிவத்தில் படைத்திருப்பதாகக் கூறுகிறான்.

2) இறைநம்பிக்கை மற்றும் நற்செயல் மூலம்தான் மனிதன் இவ் வுலகிலும் மறு உலகிலும் உயர்வு அடைய முடியும்.

3) இறைமறுப்புக்கொள்கை மனிதனை இவ்வுலகில் மிகமிகக் கீழான நிலைக்கே கொண்டு செல்லும். மறுஉலகில் நரகம் செல்லவே வழி வகுக்கும்.

4) அல்லாஹ் நீதிமிக்கவன். அவனது தீர்ப்பும் நியாயமானதே.

## سورة: العلق

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

ٱقۡرَأۡ بِٱسۡمِ رَبِّكَ ٱلَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ ٱلۡإِنسَٰنَ مِنۡ عَلَقٍ ﴿٢﴾ ٱقۡرَأۡ وَرَبُّكَ ٱلۡأَكۡرَمُ ﴿٣﴾
ٱلَّذِي عَلَّمَ بِٱلۡقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ ٱلۡإِنسَٰنَ مَا لَمۡ يَعۡلَمۡ ﴿٥﴾ كَلَّآ إِنَّ ٱلۡإِنسَٰنَ لَيَطۡغَىٰٓ ﴿٦﴾ أَن
رَّءَاهُ ٱسۡتَغۡنَىٰٓ ﴿٧﴾ إِنَّ إِلَىٰ رَبِّكَ ٱلرُّجۡعَىٰٓ ﴿٨﴾ أَرَءَيۡتَ ٱلَّذِي يَنۡهَىٰ ﴿٩﴾ عَبۡدًا إِذَا صَلَّىٰٓ
﴿١٠﴾ أَرَءَيۡتَ إِن كَانَ عَلَى ٱلۡهُدَىٰٓ ﴿١١﴾ أَوۡ أَمَرَ بِٱلتَّقۡوَىٰٓ ﴿١٢﴾ أَرَءَيۡتَ إِن كَذَّبَ وَتَوَلَّىٰٓ ﴿١٣﴾
أَلَمۡ يَعۡلَم بِأَنَّ ٱللَّهَ يَرَىٰ ﴿١٤﴾ كَلَّا لَئِن لَّمۡ يَنتَهِ لَنَسۡفَعَۢا بِٱلنَّاصِيَةِ ﴿١٥﴾ نَاصِيَةٖ كَٰذِبَةٍ
خَاطِئَةٖ ﴿١٦﴾ فَلۡيَدۡعُ نَادِيَهُۥ ﴿١٧﴾ سَنَدۡعُ ٱلزَّبَانِيَةَ ﴿١٨﴾ كَلَّا لَا تُطِعۡهُ وَٱسۡجُدۡ وَٱقۡتَرِب ۩
﴿١٩﴾

### சூரத்துல் அலக் (96), மக்காவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) (நபியே) ஓதுவீராக! படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு!

(2) அலQக் எனும் (அட்டை போல் ஒட்டிக்கொண்டிருக்கும்) பொருள்களில் இருந்து மனிதனை அவன் படைத்தான்.

(3) ஓதுவீராக! உம் இறைவன் எத்தகைய பெரும் கொடையாளன் எனில்,

(4) அவனே எழுதுகோல் கொண்டு கற்றுக்கொடுத்தான்.

(5) மனிதனுக்கு -அவன் அறியாதிருந்தவற்றைக் கற்றுக் கொடுத்தான்.

(6) அவ்வாறன்று! மனிதன் வரம்பு மீறி நடக்கிறான்.,

(7) தன்னிறைவுடையவனாக அவன் தன்னைக் கருதிக் கொண்டதனால்!

(8) திண்ணமாக உம் இறைவனிடம்தான் அவன் திரும்பிச் சென்றாக வேண்டும்.

(9) தடுக்கிறானே அப்படிப்பட்டவனை நீர் பார்த்தீரா?

(10) ஓர் அடியாரை -அவர் தொழுது கொண்டிருக்கும்போது (தடுப்பவனைப் பார்த்தீரா?)

(11) நீர் என்ன கருதுகிறீர்? அவர் நேர்வழியில் நடந்தாலுமா? (தொழவிடாமல் அவரைத் தடுக்க வேண்டும்?)

(12) அல்லது தூய்மையை மேற்கொள்ளும்படி அவர் ஏவினாலுமா? (தொழவிடாமல் அவரைத் தடுக்க வேண்டும்?)

(13) (இந்த மனிதன்) சத்தியத்தைப் பொய் என்று தூற்றினால் மேலும் புறக்கணிக்கவும் செய்தால் (அவனது செயல்பற்றி) நீர் என்ன கருதுகிறீர்?

(14) அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியாதா?

(15) அவ்வாறன்று! அவன் (இப்படிச் செய்வதிலிருந்து) விலகிட வில்லையெனில், நிச்சயமாக நாம் அவனது நெற்றி முடியைப் பிடித்து இழுப்போம்.

(16) கடும் தவறிழைத்த, பொய்யுரைத்த நெற்றி முடியை!

(17) அவன் தனது கூட்டத்தை அழைக்கட்டும்.

(18) (தண்டிக்கக்கூடிய) மலக்குகளை நாம் அழைப்போம்!

(19) அவ்வாறன்று! அவனுக்குக் கீழ்ப்படியாதீர். ஸு ஜூ து செய்யும்! (இறைவனின்) நெருக்கத்தைப் பெறும்!

## கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) கல்விக்கும் படிப்புக்கும் இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம். வானத்திலிருந்து இறங்கிய முதல் வசனமே ஓதுவீராக என்பதுதான்!

2) முஸ்லிம்கள் தங்களுடைய செயல்களையும் பேச்சுகளையும் அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டே தொடங்கிட வேண்டும்.

3) அல்லாஹ்தான் மனிதனுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தான். எழுதுகோலை வழங்கி எழுத்தறிவித்தவனும் அவனே!

4) ஆணவம் கொண்டு, ஆண்டவனுக்குக் கீழ்ப்படியாத போக்கு குறித்து மனிதனை அல்லாஹ் எச்சரிக்கை செய்கிறான்.

5) மனிதர்கள் அனைவரும் ஒருநாள் அல்லாஹ்விடம் திரும்பிச் சென்றாக வேண்டும். அவனது நீதி மன்றத்தில் தத்தம் செயல்கள் குறித்து அனைவரும் பதில் சொல்லியாக வேண்டும்.

6) இஸ்லாத்தின் பேரிலும் இறைத்தூதருடனும் அபூ ஜஹ்ல் கொண்டிருந்த கடும் பகையும் அவனைப் போன்ற கொடிய விரோதிகளின் தண்டனை என்ன என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

7) எதிரிகளின் எல்லாவிதமான தீங்கில் இருந்தும் தன் தூதருக்கு அல்லாஹ் பாதுகாப்பு அளிப்பவனாக இருக்கிறான்.

8) இறைவழிபாடு செய்யவிடாமலும் நன்மை செய்யவிடாமலும் மக்களைத் தடுப்பது தான் மிகமிக மோசமான தீமையாகும்.

9) இறைவழிபாட்டில் தொடர்ந்து ஈடுபடுமாறும் ஸு ஜூ து செய்யு மாறும் நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் பகரும் அறிவுரை.

10) இந்த அத்தியாயத்தில் ஸஜ்தா திலாவத்-ஓதலின் சிர வணக்கம் வருகிறது. எனும் அத்தியாயத்தின் இறுதி வசனத்தை ஒருவர் ஓதினால் கிப்லாவை முன்னோக்கி ஒருமுறை ஸு ஜூ த் செய்திட வேண்டும்.

## سورة: القدر

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

إِنَّآ أَنزَلْنَٰهُ فِى لَيْلَةِ ٱلْقَدْرِ ﴿١﴾ وَمَآ أَدْرَىٰكَ مَا لَيْلَةُ ٱلْقَدْرِ ﴿٢﴾ لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ
شَهْرٍ ﴿٣﴾ تَنَزَّلُ ٱلْمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِم مِّن كُلِّ أَمْرٍ ﴿٤﴾ سَلَٰمٌ هِىَ حَتَّىٰ مَطْلَعِ
ٱلْفَجْرِ ﴿٥﴾

**சூரத்துல் கத்ர் (97), மக்காவில் அருளப்பட்டது.**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) திண்ணமாக நாம் இதனை (குர்ஆனை) மாட்சிமை மிக்க இரவில் இறக்கிவைத்தோம்.

(2) மாட்சிமைமிக்க இரவு என்னவென்று உமக்குத் தெரியுமா?

(3) மாட்சிமைமிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும்.

(4) அதில் மலக்குகளும் ஜிப்ரீலும் தம் இறைவனின் அனுமதியுடன் அனைத்து கட்டளைகளையும் ஏந்திய வண்ணம் இறங்குகிறார்கள்.

(5) அந்த இரவு முழுவதும் நலம் மிக்கதாகத் திகழும்., வைகறை உதயம் வரையில்!

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) லைலத்துல் ஏகத்ர் என்பது மகத்தான ஓர் இரவு. அதில் தான் திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்டது.

2) நன்மை மற்றும் நற்கூலியைப் பொறுத்து இந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது.

3) இந்த இரவில் மலக்குகளும் ஜிப்ரீலும் பூமிக்கு இறங்கி வருகிறார்கள்.

4) லைலத்துல் ஏகத்ர் இரவு ரமளான் மாதத்தின் கடைசி பத்து நாட்களின் ஒற்றைப்படை இரவுகளில் அமைந்துள்ளது.

## سورة: البينة

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

لَمْ يَكُنِ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِنْ أَهْلِ ٱلْكِتَٰبِ وَٱلْمُشْرِكِينَ مُنفَكِّينَ حَتَّىٰ تَأْتِيَهُمُ ٱلْبَيِّنَةُ ﴿١﴾
رَسُولٌ مِّنَ ٱللَّهِ يَتْلُوا۟ صُحُفًا مُّطَهَّرَةً ﴿٢﴾ فِيهَا كُتُبٌ قَيِّمَةٌ ﴿٣﴾ وَمَا تَفَرَّقَ ٱلَّذِينَ أُوتُوا۟
ٱلْكِتَٰبَ إِلَّا مِنۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ ٱلْبَيِّنَةُ ﴿٤﴾ وَمَآ أُمِرُوٓا۟ إِلَّا لِيَعْبُدُوا۟ ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ

حُنَفَآءَ وَيُقِيمُواْ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُواْ ٱلزَّكَوٰةَ ۚ وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ ۝٥ إِنَّ ٱلَّذِينَ كَفَرُواْ مِنْ
أَهْلِ ٱلْكِتَٰبِ وَٱلْمُشْرِكِينَ فِى نَارِ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ ۚ أُوْلَٰٓئِكَ هُمْ شَرُّ ٱلْبَرِيَّةِ ۝٦ إِنَّ
ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ أُوْلَٰٓئِكَ هُمْ خَيْرُ ٱلْبَرِيَّةِ ۝٧ جَزَآؤُهُمْ عِندَ رَبِّهِمْ
جَنَّٰتُ عَدْنٍ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًا ۖ رَّضِىَ ٱللَّهُ عَنْهُمْ وَرَضُواْ عَنْهُ ۚ
ذَٰلِكَ لِمَنْ خَشِىَ رَبَّهُۥ ۝٨

**சூரத்துல் பய்யினா (98), மதீனாவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) வேதம் அருளப்பட்டவர்களிலும் இணைவைப்பாளர்களிலும் உள்ள நிராகரிப்பாளர்கள் தங்களது நிராகரிப்பிலிருந்து விலகக் கூடியவர்களாய் இருக்கவில்லை., தெளிவான சான்று தங்களிடம் வரும் வரை!

(2) தூய்மையான வேத நூல்களை ஓதிக் காண்பிக்கக் கூடிய ஒரு தூதர் அல்லாஹ்விடம் இருந்து (வரும் வரை!)

(3) அவற்றில் முற்றிலும் செம்மையான - நிலையான சட்டங்கள் எழுதப்பட்டிருக்கும்.

(4) முன்னர் வேதம் வழங்கப்பட்டவர்கள் பிளவுபட்டுப் போனது (நேர்வழி குறித்த) தெளிவான சான்று அவர்களிடம் வந்த பிறகுதான்!

(5) ஆனால் தங்களது கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கியவர்களாய், முற்றிலும் மன ஒருமைப்பட்டவர்களாய் அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்., (என்பதைத் தவிர) - தொழுயையை நிலை நாட்ட வேண்டும்., ஜகாத் கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தக் கட்டளையும் அவர்களுக்கு இடப்படவில்லை. இதுதான் மிகவும் சீரான, செம்மையான மார்க்கம்.

(6) வேதக்காரர்களிலும் இணைவைப்பாளர்களிலும் உள்ள நிராகரிப்பாளர்கள் திண்ணமாக நரக நெருப்பில்தான் நுழைவார்கள் அதில் நிரந்தரமாக வீழ்ந்து கிடப்பார்கள். அவர்கள்தான் படைப்பினங்களிலேயே மிகவும் கீழ்த்தரமானவர்கள்.

(7) எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்களும் புரிந்தார்களோ அவர்கள்தாம் திண்ணமாகப் படைப்பினங்களி-லேயே மிகவும் சிறந்தவர்கள்.

(8) அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் நிலையாகத் தங்கும் சுவனங்களாகும். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அங்கு அவர்கள் நிரந்தரமாகத் தங்கி வாழ்வார்கள். அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தியுற்றான். அவர்களும் அவனைக் குறித்து திருப்தியுற்றார்கள். இவை (அனைத்தும்) தம் இறைவனை அஞ்சக் கூடிய மனிதருக்கு உரியதாகும்.

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மனித குலம் முழுவதற்கும் அனுப்பப்பட்ட இறுதி நபி.

2) ஒரிறை மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.,ஒரே இறையை மட்டுமே வணங்க வேண்டும் என்பதுதான் மனித குலம் முழுவதற்கும் இறைவன் அளித்த கட்டளை.

3) இஸ்லாம் மட்டுமே சத்திய மார்க்கம். ஏனைய மதங்கள் அனைத்தும் போலியானவை.

4) இறைமறுப்பாளர்கள்தான் படைப்பினங்களிலேயே மிகக் கெட்டவர்கள். அவர்கள் நரகத்தில் நிரந்தரமாக வீழ்ந்துகிடப்பார்கள். இறைநம்பிக்கை கொண்டு நல்ல அமல்கள் செய்யும் முஸ்லிம்கள்தான் படைப்பினங்களிலேயே மிகச் சிறந்தவர்கள். அவர்கள் சுவனபதியில் நிரந்தரமாகத் தங்கிவாழ்வார்கள்.

5) அல்லாஹ் சுவன வாசிகளைப் பொருந்திக்கொண்டான். அங்கு அவர்களுக்காகத் தயார் செய்து வைத்துள்ள மிக்க மேலான இன்ப நலன்கள் குறித்து அவர்களையும் பொருந்திக்கொள்ளச் செய்வான்.

**سورة: الزلزلة**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

إِذَا زُلْزِلَتِ ٱلْأَرْضُ زِلْزَالَهَا ﴿١﴾ وَأَخْرَجَتِ ٱلْأَرْضُ أَثْقَالَهَا ﴿٢﴾ وَقَالَ ٱلْإِنسَـٰنُ مَا لَهَا
﴿٣﴾ يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ﴿٤﴾ بِأَنَّ رَبَّكَ أَوْحَىٰ لَهَا ﴿٥﴾ يَوْمَئِذٍ يَصْدُرُ ٱلنَّاسُ
أَشْتَاتًا لِّيُرَوْا۟ أَعْمَـٰلَهُمْ ﴿٦﴾ فَمَن يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُۥ ﴿٧﴾ وَمَن يَعْمَلْ مِثْقَالَ
ذَرَّةٍ شَرًّا يَرَهُۥ ﴿٨﴾

**சூரத்துஸ் ஸல்ஸலா (99), மதீனாவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) பூமி முழு பலத்துடன் உலுக்கப்படும்பொழுது -

(2) அது தன்னுள் உள்ள சுமைகள் அனைத்தையும் வெளியே தள்ளும்பொழுது

(3) மேலும் இதற்கு என்ன நேர்ந்துவிட்டது என்று மனிதன் கேட்கும் போது

(4) அந்நாளில் - தன் மீது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அது எடுத்துரைக்கும்.

(5) ஏனெனில் உம் இறைவன் அதற்கு (அவ்வாறு எடுத்துரைக்கும்படி) ஆணையிட்டிருப்பான்.

(6) அன்று மக்கள் பல்வேறு பிரிவினராய்த் திரும்புவார்கள்., (எதற்காகவெனில்,) தங்கள் செயல்கள் தங்களுக்குக் காண்பிக்கப்படுவதற்காக!

(7) பிறகு எவன் அணுஅளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதனைக் கண்டுகொள்வான்.

(8) மேலும் எவன் அணுஅளவு தீமை செய்திருந்தானோ அவன் அதனைக் கண்டுகொள்வான்.

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) மறுமை நாள் ஏற்படும்போது பூமியின் இந்த அமைப்பு முழுவதும் மாறிவிடும்.

2) சூர் (எக்காளம்) இரண்டாவது முறை ஊதப்பட்ட பிறகு மண்ணறைகளில் இருந்து மனிதர்கள் அனைவரும் வெளியேறி வருவர்.

3) இந்தப் பூமியில் மனிதர்கள் என்னென்ன செய்தார்கள் என்பதை இந்தப் பூமியே மறுமை நாளில் அறிவித்துக்கொடுக்கும்.

4) மறு உலகம் என்பது இவ்வுலகத்தை விட்டும் முற்றிலும் மாறுபட்டது.

**سورة: العاديات**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

وَٱلْعَـٰدِيَـٰتِ ضَبْحًا ﴿١﴾ فَٱلْمُورِيَـٰتِ قَدْحًا ﴿٢﴾ فَٱلْمُغِيرَٰتِ صُبْحًا ﴿٣﴾ فَأَثَرْنَ بِهِۦ نَقْعًا
﴿٤﴾ فَوَسَطْنَ بِهِۦ جَمْعًا ﴿٥﴾ إِنَّ ٱلْإِنسَـٰنَ لِرَبِّهِۦ لَكَنُودٌ ﴿٦﴾ وَإِنَّهُۥ عَلَىٰ ذَٰلِكَ لَشَهِيدٌ ﴿٧﴾
وَإِنَّهُۥ لِحُبِّ ٱلْخَيْرِ لَشَدِيدٌ ﴿٨﴾ ۞ أَفَلَا يَعْلَمُ إِذَا بُعْثِرَ مَا فِى ٱلْقُبُورِ ﴿٩﴾ وَحُصِّلَ مَا فِى
ٱلصُّدُورِ ﴿١٠﴾ إِنَّ رَبَّهُم بِهِمْ يَوْمَئِذٍ لَّخَبِيرٌۢ ﴿١١﴾

**சூரத்துல் ஆதியாத் (100), மக்காவில் அருளப்பட்டது.**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) மூச்சிறைக்கப் பாய்ந்து ஓடுகிற குதிரைகள் மீது சத்தியமாக!

(2) பின்னர் குழம்புகளில் இருந்து தீப்பொறியை எழுப்புகிற குதிரைகள் மீது சத்தியமாக!

(3) மேலும் அதிகாலையில் பாய்ந்து தாக்குதல் நடத்தி அதனால் புழுதியைக் கிளப்புகிற குதிரைகள் மீது சத்தியமாக!

(4) மேலும் கூட்டத்தின் நடுவே நுழைந்து விடும் குதிரைகள் மீது சத்தியமாக!

(5) உண்மையில் மனிதன் தன் இறைவனுக்கு மிகவும் நன்றி கெட்டவனாக இருக்கிறான்.

(6) திண்ணமாக அவனே அதற்குச் சாட்சியாகவும் இருக்கிறான்.

(7) மேலும் அவன், செல்வத்தின் மீது அளவு கடந்த மோகம் கொண்டவனாக இருக்கிறான்.

(8) அவன் அறியமாட்டானா? (அதாவது) மண்ணறைகளில் அடக்கப்பட்டுள்ள அனைத்தும் வெளியே கொண்டு வரப்பட்டால்,

(9) மேலும் நெஞ்சங்களில் மறைக்கப்பட்டு உள்ளவை அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டால்,

(10) திண்ணமாக அவர்களின் இறைவன் அந்நாளில் அவர்களைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருப்பான் என்பதை!

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) அல்லாஹ்வின் பாதையில் (தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வது) எனும் ஜிஹாதின் சிறப்பு மகத்தானது.

2) இறையருட்கொடைகளை மறுக்கும் மனிதன் தனக்குத் தானே அநீதி இழைத்தவனாகிறான்.

3) உலகின் சுகபோகங்களையே மனிதன் அதிகம் நேசிக்கிறான்.

4) மறுமை நாளில் மண்ணறைகளில் இருந்து மனிதர்களை அல்லாஹ் வெளியேற்றுவான். அவர்கள் செய்த அமல்களை ஒன்று திரட்டி கேள்வி - கணக்கு கேட்பான்.

**سورة: القارعة**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

ٱلْقَارِعَةُ ۝١ مَا ٱلْقَارِعَةُ ۝٢ وَمَآ أَدْرَىٰكَ مَا ٱلْقَارِعَةُ ۝٣ يَوْمَ يَكُونُ ٱلنَّاسُ
كَٱلْفَرَاشِ ٱلْمَبْثُوثِ ۝٤ وَتَكُونُ ٱلْجِبَالُ كَٱلْعِهْنِ ٱلْمَنفُوشِ ۝٥ فَأَمَّا مَن
ثَقُلَتْ مَوَٰزِينُهُۥ ۝٦ فَهُوَ فِى عِيشَةٍ رَّاضِيَةٍ ۝٧ وَأَمَّا مَنْ خَفَّتْ مَوَٰزِينُهُۥ ۝٨ فَأُمُّهُۥ
هَاوِيَةٌ ۝٩ وَمَآ أَدْرَىٰكَ مَا هِيَهْ ۝١٠ نَارٌ حَامِيَةٌۢ ۝١١

**சூரத்துல் காரிஆ (101), மக்காவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) பயங்கரமான சப்தத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி!

(2) அந்தப் பயங்கரமான நிகழ்ச்சி என்ன?

(3) அந்தப் பயங்கரமான நிகழ்ச்சி என்ன என்று உமக்குத் தெரியுமா, என்ன?

(4) அந்நாளில் மக்கள் சிதறிக்கிடக்கும் ஈசல்கள் போன்று ஆகிவிடுவர்.

(5) மலைகள் கடையப்பட்ட வண்ண வண்ணக் கம்பளி போன்று ஆகிவிடும்.

(6) பிறகு எவரின் எடைத்தட்டுகள் கனத்திருக்குமோ அவர்,

(7) மனதிற்குகந்த வாழ்வைப் பெறுவார்.

(8) ஆனால் எவரின் எடைத்தட்டுகள் இலேசாக இருக்குமோ

(9) அவருடைய தங்குமிடம் ஆழமான படுகுழிதான்!

(10) அது என்ன படுகுழி என்பது உமக்குத் தெரியுமா?

(11) கொழுந்து விட்டெரியும் நெருப்பு!

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) மறுமை நாளுக்கு, **اَلْقَارِعَةُ** (பயங்கர சப்தத்தை ஏற்படுத்தும் நாள்)என்றும் ஒருபெயர் உண்டு. ஏனெனில் அந்த நாளில் பேரிடி போன்ற பயங்கர ஓசை ஏற்பட்டு மக்கள் அனைவரும் அச்சத்திற்கும் பீதிக்கும் உள்ளாவர்! அது இரண்டாவது முறை சூர் (எக்காளம்) ஊதப்படும்பொழுது ஏற்படும். குர்ஆன் கூறுகிறது:

(அந்நாளில்) எக்காளம் ஊதப்படும். அப்பொழுது வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைவரும் பெரும் திகில் அடைவார்கள். (அந்தத் திகிலில் இருந்து) அல்லாஹ் காப்பாற்ற நாடியவர்களைத் தவிர! அனைவரும் அடங்கி ஒடுங்கியவர்களாக அவன் முன்னிலையில் வருவார்கள்" (27:87)

2) மறுமை நாள் ஏற்படும்போது இப்பேரண்டத்தின் அமைப்பு சீர் குலைந்து முற்றிலும் மாற்றம் அடைந்து விடும்.

3) மறுமை நாளில் மனிதர்கள் அனைவரும் நிலைகுலைந்து அங்கும் இங்கும் ஓடுவது ஈசல்கள் சிதறி ஓடுவது போல் இருக்கும். மனிதர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாகப்பெருகி இருப்பதும் எங்கு நோக்கினும் அச்சமும் பீதியும் ஆட்கொண்டிருப்பதுமே அதற்குக் காரணம்.

4) ஒவ்வொரு மனிதனும் தத்தம் செயல்களின் மதிப்பீட்டைக் கண்ணெதிரில் காணும் வகையில் மறுமை நாளில் அவர்கள் அனைவரின் அமல்களும் கண்ணெதிரில் தராசில் வைத்து நிறுக்கப்படும்.

**سورة: التكاثر**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

أَلْهَىٰكُمُ ٱلتَّكَاثُرُ ﴿١﴾ حَتَّىٰ زُرْتُمُ ٱلْمَقَابِرَ ﴿٢﴾ كَلَّا سَوْفَ تَعْلَمُونَ ﴿٣﴾ ثُمَّ كَلَّا سَوْفَ
تَعْلَمُونَ ﴿٤﴾ كَلَّا لَوْ تَعْلَمُونَ عِلْمَ ٱلْيَقِينِ ﴿٥﴾ لَتَرَوُنَّ ٱلْجَحِيمَ ﴿٦﴾ ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ
ٱلْيَقِينِ ﴿٧﴾ ثُمَّ لَتُسْـَٔلُنَّ يَوْمَئِذٍ عَنِ ٱلنَّعِيمِ ﴿٨﴾

**சூரத்துத் தகாஸு ர் (102), மக்காவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) அடுத்தவரை விட அதிகமாக வசதி வாய்ப்புகளைப் பெற வேண்டும் எனும் எண்ணம் உங்களை மெய்மறதியில் ஆழ்த்தி விட்டது.

(2) நீங்கள் மண்ணறைகளைச் சென்றடையும் வரையில் (இதே எண்ணத்திலேயே மூழ்கியிருக்கிறீர்கள்)

(3) அவ்வாறன்று! விரைவில் உங்களுக்குப் புரிந்துவிடும்!

(4) இன்னும் கேட்டுக்கொள்ளுங்கள். விரைவில் உங்களுக்குப் புரிந்துவிடும்.

(5) (உங்களது தவறான நடத்தையின் இறுதி விளைவை) உறுதியாக நீங்கள் அறிந்திருந்தால் இப்படிச் செயல்பட மாட்டீர்கள்.

(6) திண்ணமாக நீங்கள் நரகத்தைப் பார்க்கத்தான் போகிறீர்கள்!

(7) இன்னும் (கேட்டுக்கொள்ளுங்கள்) திண்ணமாக நீங்கள் அதனைக் கண்கூடாகப் பார்க்கத்தான் போகிறீர்கள்!

(8) பிறகு அந்நாளில் இந்த அருட்கொடைகளைப் பற்றி கட்டாயம் உங்களிடம் வினவப்பட்டே தீரும்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) தங்களது வாழ் நாட்களை கேளிக்கையிலும் வேடிக்கையிலுமே கழிப்பவர்களை அல்லாஹ் இகழ்கிறான்.

2) இவ்வுலகின் ஈடுபாடுகள் இறைநம்பிக்கையாளனை மறுமைச் சிந்தனையில் இருந்து திசைதிருப்பிவிடாது.

3) இவ்வுலகில் வழங்கும் அருட்கொடைகளைப் பற்றி மறுமை நாளில் எல்லா மனிதர்களிடமும் கேள்வி கணக்கு கேட்கப்படும். இந்த அருட்கொடைகளுக்கு ஏன் நன்றி கொன்றீர்கள்? என்று அல்லாஹ் வினவுவான்.

### سورة: العصر

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

وَٱلْعَصْرِ ﴿١﴾ إِنَّ ٱلْإِنسَٰنَ لَفِى خُسْرٍ ﴿٢﴾ إِلَّا ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَمِلُوا۟ ٱلصَّٰلِحَٰتِ وَتَوَاصَوْا۟
بِٱلْحَقِّ وَتَوَاصَوْا۟ بِٱلصَّبْرِ ﴿٣﴾

### சூரத்துல் அஸ்ர் (103), மக்காவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) காலத்தின் மீது சத்தியமாக!

(2) உண்மையில் மனிதன் பெரும் நஷ்டத்தில் இருக்கிறான்.

(3) ஆனால் யார் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்து, மேலும் ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்துக் கொண்டும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுரை கூறிக்கொண்டும் இருக்கிறார்களோ அவர்களைத் தவிர!

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) இறைநம்பிக்கையும் நல்ல அமலும் இல்லாத மனிதனிடம் எந்த நன்மையும் இல்லை.

2) உண்மை முஸ்லிம்கள் நன்மையான காரியத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வார்கள்.

3) உண்மை முஸ்லிம்கள் அழைப்புப் பணியினால் வணக்க வழிபாட்டினால் ஏற்படும் கஷ்டங்களை பொறுத்துக் கொள்வர்.

**سورة: الهمزة**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

وَيْلٌ لِّكُلِّ هُمَزَةٍ لُّمَزَةٍ ﴿١﴾ ٱلَّذِى جَمَعَ مَالًا وَعَدَّدَهُۥ ﴿٢﴾ يَحْسَبُ أَنَّ مَالَهُۥٓ أَخْلَدَهُۥ
﴿٣﴾ كَلَّا ۖ لَيُنۢبَذَنَّ فِى ٱلْحُطَمَةِ ﴿٤﴾ وَمَآ أَدْرَىٰكَ مَا ٱلْحُطَمَةُ ﴿٥﴾ نَارُ ٱللَّهِ ٱلْمُوقَدَةُ ﴿٦﴾ ٱلَّتِى
تَطَّلِعُ عَلَى ٱلْأَفْـِٔدَةِ ﴿٧﴾ إِنَّهَا عَلَيْهِم مُّؤْصَدَةٌ ﴿٨﴾ فِى عَمَدٍ مُّمَدَّدَةٍۭ ﴿٩﴾

## சூரத்துல் ஹுமஸா (104), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்.

(1) (மக்களை நேருக்கு நேர்) இழித்துரைத்துக் கொண்டும் (முதுகுக்குப் பின்) குறை கூறிக்கொண்டும் திரிகிற ஒவ்வொரு மனிதனுக்கும் கேடுதான்.

(2) அவன் செல்வத்தைச் சேகரித்து எண்ணி எண்ணி வைக்கிறான்.

(3) தன்னுடைய செல்வம் தன்னை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் என்று கருதுகிறான்.

(4) அவ்வாறன்று! சிதைத்துச் சின்னாப்பின்னமாக்கக் கூடிய ஓர் இடத்தில் அவன் வீசி எறியப்படுவான்.

(5) சிதைத்துச் சின்னாப்பின்னமாக்கக் கூடிய அந்த இடம் எது என்று உமக்குத் தெரியுமா?

(6) அது அல்லாஹ்வின் நெருப்பு! அது உக்கிரமாக மூட்டப்பட்டிருக்கும்!

(7) அது இதயங்கள் வரை சென்று பரவக்கூடியதாகும்!

(8) திண்ணமாக அது அவர்கள் மீது சூழ்ந்து மூடப்பட்டிருக்கும்.

(9) அவர்களோ உயர உயரமான தூண்களில் கட்டப்பட்டிருப்பார்கள்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) பிறரைப் பரிகாசம் செய்யக் கூடாது. குற்றங்குறைகளைச் சொல்லிக் குத்திக் காட்டிப் பேசவும் கூடாது. இவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளது.

2) குவிந்து கிடக்கும் செல்வம் மரணத்தைத் தடுக்கப்போவதில்லை. மறுமைத் தண்டனையில் இருந்தும் காப்பாற்றப் போவதில்லை.

3) நரக வாசிகள் நரகநெருப்பில் புகுத்தப்பட்டு உடல்கள் கரித்துப் பொசுக்கப்படும். அவர்களை உள்ளே தள்ளி நரகம் பூட்டப்பட்டு விடும்.

**سورة: الفيل**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَٰبِ ٱلْفِيلِ ﴿١﴾ أَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِى تَضْلِيلٍ ﴿٢﴾ وَأَرْسَلَ
عَلَيْهِمْ طَيْرًا أَبَابِيلَ ﴿٣﴾ تَرْمِيهِم بِحِجَارَةٍ مِّن سِجِّيلٍ ﴿٤﴾ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّأْكُولٍۭ ﴿٥﴾

**சூரத்துல் பீல் (105), மக்காவில் அருளப்பட்டது**

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) யானைப் படையினருடன் உம் இறைவன் எப்படி நடந்து கொண்டான் என்பதை நீர் பார்க்கவில்லையா?

(2) அவர்களின் சதித் திட்டத்தை அவன் வீணடித்து விட வில்லையா?

(3) மேலும் அவர்கள் மீது பறவைகளைக் கூட்டம் கூட்டமாக அவன் அனுப்பினான்.

(4) அவை, சுடப்பட்ட களிமண் கற்களை அவர்கள் மீது வீசிக் கொண்டிருந்தன.

(5) பிறகு (கால்நடைகளால்) மென்று தின்னப்பட்ட வைக்கோல் போன்று அவர்களை ஆக்கிவிட்டான்!

**கவனிக்க வேண்டிய கருத்துகள்**

1) புனித கஅபா ஆலயத்தை எல்லா விதமான தீங்கில் இருந்தும் அல்லாஹ் பாதுகாக்கிறான்.

2) அப்ரஹாவின் கூலிப் படைகளை ஆச்சரியமான முறையில், அச்சுறுத்தும் வகையில் அல்லாஹ் அழித்தான்.

3) திரண்டு வந்த எதிரிப்படைகளை அழித்தது மக்காவாசி களுக்கு அல்லாஹ் செய்த பேருபகாரமாகும். அதனையே இங்கு நினைவூட்டுகிறான்!

4) இஸ்லாத்திற்கு என்றைக்கும் அல்லாஹ்வின் தக்க பாதுகாப்பு உண்டு என்று முஸ்லிம்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**سورة: قريش**

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

لِإِيلَٰفِ قُرَيْشٍ ﴿١﴾ إِۦلَٰفِهِمْ رِحْلَةَ ٱلشِّتَآءِ وَٱلصَّيْفِ ﴿٢﴾ فَلْيَعْبُدُوا۟ رَبَّ هَٰذَا ٱلْبَيْتِ
﴿٣﴾ ٱلَّذِىٓ أَطْعَمَهُم مِّن جُوعٍ وَءَامَنَهُم مِّنْ خَوْفٍۭ ﴿٤﴾

## சூரத்து குறைஷ் (106), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப் பெயரால்

(1) குறைஷிகள் எத்துணை நன்றாகப் பழக்கப்பட்டு விட்டார்கள்!

(2) (அதாவது)குளிர்கால மற்றும் கோடை காலப் பயணங்களில் நன்கு பழக்கப்பட்டுவிட்டார்கள்!

(3) எனவே அவர்கள் இந்த இல்லத்தின் இறைவனை வணங்கி அடிபணியட்டும்.

(4) அவன்தான் அவர்களைப் பசியிலிருந்து காப்பாற்றி உணவு வழங்கினான். அச்சத்திலிருந்து அவர்களை மீட்டு அமைதி அளித்தான்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) குறைஷிகளுக்கு ரிஜ்க் (வாழ்வாதாரம்),அமைதி வாழ்வு ஆகியவற்றின் மூலம் அல்லாஹ் அளித்த கண்ணியத்திற்கு கஅபா ஆலயமே அடிப்படையாகும். குறைஷிகள் அதன் அரங்காவலர்களாய் இருந்தனர்.

2) குறைஷிகள் ஆண்டில் இரு முறை பயணம் மேற்கொள்வர். குளிர் காலத்தில் யமன் தேசம் செல்வர். கோடை காலத்தில் ஷாம் தேசம் செல்வர்.

3) எல்லா வகையான அருட்கொடைகளுக்காகவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது மக்கள் அனைவர் மீதும் கடமை. அவனை மட்டும் வணங்கி அவனுக்கு அடிபணிந்து வாழ்வதன் மூலம் அது நிறைவேறும்.

## سورة: الماعون

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

أَرَءَيۡتَ ٱلَّذِي يُكَذِّبُ بِٱلدِّينِ ﴿١﴾ فَذَٰلِكَ ٱلَّذِي يَدُعُّ ٱلۡيَتِيمَ ﴿٢﴾ وَلَا يَحُضُّ عَلَىٰ
طَعَامِ ٱلۡمِسۡكِينِ ﴿٣﴾ فَوَيۡلٞ لِّلۡمُصَلِّينَ ﴿٤﴾ ٱلَّذِينَ هُمۡ عَن صَلَاتِهِمۡ سَاهُونَ ﴿٥﴾
ٱلَّذِينَ هُمۡ يُرَآءُونَ ﴿٦﴾ وَيَمۡنَعُونَ ٱلۡمَاعُونَ ﴿٧﴾

## சூரத்துல் மாஊன் (107), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) (மறுமையில்) நற்கூலி- தண்டனை கொடுக்கப்படுவதைப் பொய்யென்று கூறுபவனை நீர் பார்த்தீரா?

(2) அவன்தான் அநாதையை மிரட்டி விரட்டுகிறான்.

(3) மேலும் அவன் வறியவரின் உணவை அளிக்கும்படி தூண்டுவதுமில்லை.

(4) இப்படிப்பட்ட தொழுகையாளிகளுக்குக் கேடுதான்:

(5) அவர்கள் எப்படிப்பட்டவர்கள் எனில், தங்களது தொழுகையில் அலட்சியமாக இருக்கக்கூடியவர்கள்.

(6) பிறருக்குக் காட்டுவதற்காகவே செயல்படக்கூடியவர்கள்.

(7) மேலும் சாதாரணத் தேவைகளுக்குரிய அற்பப் பொருள் களைக்கூட (பிறருக்குக்) கொடுத்து உதவுவதைத் தடுக்கக்கூடியவர்கள்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) தீய மனிதன் நல்லறம் எதுவும் செய்யவதில்லை.

2) அநாதைகள் மீது இரக்கம் காட்டுவது இஸ்லாத்தின் போதனை.

3) உண்மையான முஸ்லிம்கள், ஏழை எளியோருக்குத் தாங்களும் உதவி செய்வதுடன் பிறரையும் உதவி செய்யுமாறு தூண்டுவார்கள்

4) பகட்டுக்காகத் தொழுபவர்கள் பொய்யர்கள். அதற்கான தண்டனை அவர்களுக்கு உண்டு.

5) நல்ல முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் உதவிகரமாகத் திகழ்வார்கள்.

## سورة: الكوثر

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

إِنَّآ أَعْطَيْنَٰكَ ٱلْكَوْثَرَ ﴿١﴾ فَصَلِّ لِرَبِّكَ وَٱنْحَرْ ﴿٢﴾ إِنَّ شَانِئَكَ هُوَ ٱلْأَبْتَرُ ﴿٣﴾

## சூரத்துல் கவ்ஸர் (108), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) (நபியே) நாம் உமக்கு கவ்ஸரை வழங்கினோம்.

(2) எனவே நீர் உமது இறைவனைத் தொழுவீராக. அவனுக்காகவே) பலி எனும் குர்பானி கொடுப்பீராக.

(3) திண்ணமாக உம் பகைவன்தான் வேரறுந்தவன். (சந்ததியற்றவன்)

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு இவ்வுலகில் கண்ணியம் அளித்துள்ளான். கவ்ஸர் எனும் சுவனத்து நதி மூலம் நாளை மறுமையில் அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியம் அளிப்பான்.

2) முஸ்லிம்கள் அல்லாஹ்வை மட்டுமே வாய்மையுடன் வணங்க வேண்டும். தொழுகை, குர்பானி போன்ற எந்த வழிபாடானாலும் எல்லாவற்றையும் அல்லாஹ்வுக்காக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

## سورة: الكافرون

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

قُلْ يَٰٓأَيُّهَا ٱلْكَٰفِرُونَ ﴿١﴾ لَآ أَعْبُدُ مَا تَعْبُدُونَ ﴿٢﴾ وَلَآ أَنتُمْ عَٰبِدُونَ مَآ أَعْبُدُ ﴿٣﴾
وَلَآ أَنَا۠ عَابِدٌ مَّا عَبَدتُّمْ ﴿٤﴾ وَلَآ أَنتُمْ عَٰبِدُونَ مَآ أَعْبُدُ ﴿٥﴾ لَكُمْ دِينُكُمْ وَلِىَ دِينِ ﴿٦﴾

### சூரத்துல் கா:.பிரூன் (109), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) (நபியே) கூறிவிடுவீராக: ஓ! நிராகரிப்பாளர்களே!

(2) நீங்கள் எவற்றை வணங்குகிறீர்களோ அவற்றை நான் வணங்கப்போவதில்லை.

(3) நான் யாரை வணங்குகிறேனோ அவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர்.

(4) நீங்கள் (உங்கள் முன்னோர் உள்பட அனைவரும்) வணங்கியவற்றை நான் வணங்குபவன் அல்லன்.

(5) நான் யாரை வணங்குகிறேனோ அவனை நீங்கள் வணங்கக் கூடியவர்கள் அல்லர்.

(6) உங்களுக்கு உங்கள் மார்க்கம்., எனக்கு எனது மார்க்கம்!

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) இஸ்லாம் தவ்ஹீத் - ஓரிறை கொள்கையைப் போதிக்கிறது.

2) இஸ்லாத்தின் அடிப்படையாகிய ஏகத்துவத்துடன் ஏனைய மதங்களையும் அவற்றின் போலிச் சடங்குகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்புவது அறவே கூடாது.

3) இறைமறுப்புக்கொள்கையில் பிடிவாதமாக இருந்த குறைஷிகளின் கோரிக்கை எத்துணை வினோதமானது! அதுவே அவர்களின் அறியாமைக்கு ஆதாரமாகும்.

## سورة: النصر

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

إِذَا جَآءَ نَصْرُ ٱللَّهِ وَٱلْفَتْحُ ﴿١﴾ وَرَأَيْتَ ٱلنَّاسَ يَدْخُلُونَ فِى دِينِ ٱللَّهِ أَفْوَاجًا ﴿٢﴾
فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَٱسْتَغْفِرْهُ ۚ إِنَّهُۥ كَانَ تَوَّابًۢا ﴿٣﴾

### சூரத்துன் நஸ்ர் (110), மதீனாவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வந்துவிடும்போது,

(2) மேலும் (நபியே) மக்கள் கூட்டம் கூட்டமாக அல்லாஹ்வின் மார்க்கத்தில் (இஸ்லாத்தில்) இணைவதை நீர் காணும்போது

(3) நீர் உம் இறைவனைப் புகழ்ந்து துதிப்பீராக. மேலும் அவனிடம் மன்னிப்புத் தேடுவீராக. நிச்சயமாக அவன் பெரிதும் மன்னிப்பு வழங்குபவனாக இருக்கிறான்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) நபியவர்களுக்கு வாக்களித்த உதவியையும் வெற்றியையும் அல்லாஹ் நிறைவேற்றிக் கொடுத்தான். நபியவர்கள் மக்கா நகரை மகத்தான முறையில் வெற்றி கொண்டார்கள்.

2) அல்லாஹ்வை அதிகமாகப் புகழ்ந்து துதிக்குமாறும் பாவமன்னிப் புக் கோருமாறும் நபிகளாருக்கு அல்லாஹ் அறிவுறுத்துகிறான்.

## سورة: المسد

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

تَبَّتْ يَدَآ أَبِى لَهَبٍ وَتَبَّ ۝١ مَآ أَغْنَىٰ عَنْهُ مَالُهُۥ وَمَا كَسَبَ ۝٢ سَيَصْلَىٰ نَارًا ذَاتَ
لَهَبٍ ۝٣ وَٱمْرَأَتُهُۥ حَمَّالَةَ ٱلْحَطَبِ ۝٤ فِى جِيدِهَا حَبْلٌ مِّن مَّسَدٍۭ ۝٥

### சூரத்துல் லஹப் (111), மக்காவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) அபூ லஹபின் கைகள் அழிந்துவிட்டன., அவன் நாசமாகி விட்டான்.

(2) அவனது செல்வமும் அவனது சம்பாத்தியமும் அவனுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை.

(3) கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் விரைவில் அவனும் நுழைவான்.

(4) முட்களையும் சுள்ளிகளையும் சுமந்து வரக்கூடிய அவனுடைய மனைவியும் (அதில் நுழைவாள்)

(5) (அவற்றைக் கட்டுவதற்காக) திரிக்கப்பட்ட ஈச்சங் கயிறு அவளது கழுத்தில் இருக்கும்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) யார் யாரெல்லாம் நபி(ஸல்) அவர்களை பகைத்துக் கொள்கிறார்களோ, இஸ்லாமிய அழைப்புப் பணிக்குப் பெரும் தடையாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் நரகத்தில் புகுத்துப்படு வது திண்ணம்!

2) தீமைகள் செய்யும் மனிதனுக்கு மறுமை நாளில் அவனுடைய சொத்து சுகமோ பிள்ளைகளோ எவ்விதப் பயனும் அளித்திட மாட்டா! அப்படிப்பட்டவர்கள் நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரியே!

3) அபூ லஹபும் அவனுடைய மனைவி உம்மு ஜமீலும் நரகம் செல்வது நிச்சயம். இஸ்லாத்தின் பால் அவர்கள் கொண்டிருந்த பகைமையே அதற்குக் காரணம்.

## سورة: الإخلاص

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ﴿١﴾ ٱللَّهُ ٱلصَّمَدُ ﴿٢﴾ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾ وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا
أَحَدٌۢ ﴿٤﴾

### சூரத்துல் இக்லாஸ் (112), மக்காவில் அருளப்பட்டது

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) கூறுவீராக: அவன் அல்லாஹ்! ஏகன்!

(2) அல்லாஹ் எவரிடத்தும் எத்தேவையுமில்லாதவன்., (அவன்தான் அனைவருக்கும் தேவையானவன்)

(3) அவன் யாரையும் பெறவுமில்லை., யாராலும் பெற்றெடுக்கப்படவும் இல்லை.

(4) எவரும் அவனுக்கு நிகரானவர் அல்லர்.

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரிய இறைவன். இப்பேரண்டம் முழுவதையும் படைத்துப் பரிபாலித்துக் காக்கும் இரட்சகன்.

2) குடும்ப உறவு எனும் நிலை அல்லாஹ்வுக்கு இல்லை. தாய் தந்தையோ பிள்ளைகளோ யாரும் அல்லாஹ்வுக்குக் கிடையாது. இவற்றை விட்டும் அவன் தூய்மையானவன்.

3) அல்லாஹ்வுக்கு ஒப்பானவர், சமமானவர், நிகரானவர் என்று யாரும் இல்லை! எந்த சக்தியும் இல்லை!

4) நபி (ஸல்) அவர்கள் இந்த சூராவை ஸுப்ஹு தொழுகையின் ஸுன்னத் இரண்டாவது ரக்அத்திலும் ம∴க்ரிப் தொழுகையின் ஸுன்னத்திலும் கஅபாவை தவா∴ப் செய்த பின் உள்ள இரண்டு ரக்அத்திலும் வித்ர் தொழுகையிலும் ஓதக்கூடியவர்களாய் இருந்தார்கள்" (நூல்: முஸ்லிம், திர்மதி)

## سورة: الفلق

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلْفَلَقِ ﴿١﴾ مِن شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾ وَمِن شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ﴿٣﴾ وَمِن شَرِّ
ٱلنَّفَّٰثَٰتِ فِي ٱلْعُقَدِ ﴿٤﴾ وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ﴿٥﴾

## சூரத்துல் பலக் (113), மக்காவில் அருளப்பட்டது.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) கூறுவீராக: வைகரையின் இரட்சகனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

(2) அவன் படைத்துள்ள ஒவ்வொன்றின் தீங்கிலிருந்தும்!

(3) இரவின் இருள் படரும்போது - அதன் தீங்கிலிருந்தும்!

(4) முடிச்சுகளில் ஊதுகிற (ஆண்) பெண்களின் தீங்கிலிருந்தும்!

(5) பொறாமைக்காரர்கள் பொறாமை கொள்ளும்போது அவர்களின் தீங்கிலிருந்தும்! (பாதுகாப்புத் தேடுகிறேன்)

### கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்விடமே உதவி தேடி அவனிடமே தஞ்சம் புகுந்திட வேண்டும். தீமைகள், தொல்லைகளை விட்டுப் பாதுகாத்திடுமாறு அவனிடமே பிரார்த்தனை செய்திட வேண்டும்.

2) இரவில் சுற்றித் திரியும் விஷப் பூச்சிகளின் தீங்கு மற்றும் தீய மனிதர்களின் சூழ்ச்சி அனைத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரிட வேண்டும்.

3) சூனியம் ஹராம் - தடை செய்யப்பட்டதாகும். சூனியம் மற்றும் சூனியக் காரர்களின் தீங்கை விட்டும் பாதுகாக்குமாறு ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திட வேண்டும்.

4) பொறாமை கொள்வது ஹராம் - தடை செய்யப்பட்டதாகும். பொறாமை மற்றும் போறாமைக்காரர்களின் தீங்கை விட்டும் பாதுகாக்குமாறு ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திட வேண்டும்.

## سورة: الناس

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ ﴿١﴾ مَلِكِ ٱلنَّاسِ ﴿٢﴾ إِلَٰهِ ٱلنَّاسِ ﴿٣﴾ مِن شَرِّ ٱلْوَسْوَاسِ ٱلْخَنَّاسِ
﴿٤﴾ ٱلَّذِى يُوَسْوِسُ فِى صُدُورِ ٱلنَّاسِ ﴿٥﴾ مِنَ ٱلْجِنَّةِ وَٱلنَّاسِ ﴿٦﴾

## சூரத்துன் நாஸ் (114)

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்!

(1) கூறுவீராக: நான் பாதுகாப்புத் தேடுகிறேன்., மக்களின் அதிபதியிடம்,

(2) மக்களின் மன்னனிடம்,

(3) மக்களின் உண்மையான இறைவனிடம்.,

(4) பதுங்கியிருந்து ஊசலாட்டங்களை ஏற்படுத்தக்கூடியவனின் தீங்கிலிருந்து (பாதுகாப்புத் தேடுகிறேன்)

(5) அவன்தான், மனிதர்களின் உள்ளங்களில் ஊசலாட்டங்களை ஏற்படுத்துகிறான்.

(6) அவன் ஜின்னுகளில் உள்ளவனாகவோ மனிதர்களில் உள்ளவனாகவோ இருக்கலாம்.

## கவனிக்க வேண்டிய கருத்துகள்

1) அல்லாஹ்தான் மக்களைப் படைத்தவன். அவர்களின் அரசன். வாழ்க்கை விதிகளை அவர்களுக்கு வகுத்துக்கொடுப்பவன்.

2) ஷைத்தானின் தீங்கை தடுக்குமாறு ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிட வேண்டும்.

3) குழப்பத்தையும் அராஜகத்தையும் பரப்பப்கூடிய, அதில் பிறரை ஊக்கப்படுத்தக்கூடிய அனைத்து மனிதர்களும் ஷைத்தான்களே!

4) அல்லாஹ்வை நினைவு கூர்ந்து அவனை திக்ர் செய்வது ஷைத்தானை விரட்டக்கூடியதாகும்.

5) இந்த சூராவும் இதற்கு முன்னுள்ள சூரத்துல் குபலக்கும் இரு மகத்தான அத்தியாயங்களாகும். இவ்விரு சூராக்களுக்கும் பெரும் சிறப்பு உள்ளதாக நபிகளார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: இன்றைய இரவில் இறக்கியருளப்பட்ட வசனங்களைப் பார்த்தீர்களா? இவை போன்ற சிறப்புகள் எந்த வசனங்களுக்கும் இல்லை. அவைதான்: குல் அஊது பிறப்பில் பலக், குல் அஊது பிறப்பின் நாஸ்" (நூல்: முஸ்லிம்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வோர் இரவிலும் உறங்கும் போது குறிப்பாக நோயுற்றுவிடும்போது சூரத்துல் இக்லாஸு டன் சேர்த்து இம்மூன்று அத்தியாயங்களையும் மூன்று முறை ஓதி தம் இரு கைகளிலும் ஊதுவார்கள். தலையிலிருந்து கால் வரை உடல் முழுவதும் கை எட்டும் இடங்களிலெல்லாம் அந்தக் கைகளால் தடவுவார்கள்" (நூல்: அபூ தாவூத், நஸாஈ, ஹாகிம்)

அல்ஹம்துலில்லாஹ்